1970 ஜனவரி 27] [திரு. கா. வேழவேந்தன்]

பேச்சு வார்த்தைகள் நடத்தியிருக்கிறோம். அவர்களுக்கு அதன் முழு விளக்கங்களும் தெரியும். எப்படியாவது மில் திறக்கப்பட வேண்டுமென்றும், தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்றும் அரசு முனைந்து கொண்டிருக்கிறது. மேற் கொண்டு தீவிர நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றால் உறுப்பினர் அவர்களுடன் இணைந்து அவர்கள் சொல்கிற அளவில் மேற் கொண்டு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள முயலலாம்.

5. அமைச்சர் அறிக்கை

கால்நடை மருத்துவப் பட்டப் படிப்பு குறித்து, மானியக் கோரிக்கை விவாதத்தில் அளித்த பதிலுக்கு வேளாண்மை, அரிசன நலத்துறை அமைச்சர் அளித்ததிருத்த அறிக்கை

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டுச் சட்டமன்றப் பேரவையில் 21–3–1969 அன்று, மருத்துவம், பொதுச் சுகாதாரம், பொதுச் சுகாதாரம் குறித்த மூலதனச் செலவு ஆகியவற்றின் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்குப் பதிலளிக்கையில், முன்பு சுகாதாரத் துறையின் பொறுப்பு வகித்து வந்த வேளாண்மை-அரிசன நல அமைச்சர், இந்திய மருத்துவ முறைப் பட்டப் படிப்பும் (B.I M) கால்நடை மருத்துவப் பட்டப் படிப்பும் (B.V.Sc.) நான்கு ஆண்டுக்கால அளவைக் கொண்டுள்ளதால், கால்நடை மருத்துவப் பட்டதாரிகளுக்கு வழங்கப்படுகிற அதே சம்பள விகிதங்கள் இந்திய மருத்துவ முறை பட்டதாரிகளுக்கும் வழங்கப்படும் என்று பேரவையில் தெரிவித்தார். கால்நடை மருத்துவப் பட்டப்படிப்பு குறித்த உண்மையான நிலை கீழ்க்கண்டவாறு உள்ளது :

"கால்நடை மருத்துவ கால்நடை வளர்ப்பு குறித்த கால்நடை மருத்துவ பட்ட பாட முறை 6½ திங்கள் செயற்முறைப்பண்ணைப் பயிற்சி உட்பட 6 கல்வி ஆண்டுகளைக் கொண்டதாகும்".

இவ்வாறு பார்க்கையில் கால்நடை மருத்துவப் பட்டப் பாட முறை 6 ஆண்டு என்ற நீண்ட கால அளவைக் கொண்டதாகையால் இந்திய மருத்துவ முறைப் பட்டப் படிப்பும், கால்நடை மருத்துவ பட்டப் படிப்பு எல்லாக் கூறுகளிலும் ஒப்பானவையெனக் கருத இயலாது.

3. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை அலுவலுடன் வரிசையில் மாற்றம்.

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN: Sir, in lieu of the motion already circulated, I move—

"That, under sub-rule (3) of Rule 21 of the Tamil Nadu Legislative Assembly Rules, Item IV—Second Supplementary Statement of Expenditure for the year 1969–70, and Item V—Government Bill—be taken up before Item III—Discussion on Governor's Address."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.